

தென்காசி மாவட்டம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் ம.தி.மு.க. சார்பில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட வேட்பாளர் தி.மு. ராசேந்திரன் வெற்றி பெற்றார். அதற்கான நன்றி அறிவிப்பு பொதுக்கூட்டம் கடையநல்லூரில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் பங்கேற்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினார். ம.தி.மு.க. வடக்கு மாவட்டச் செயலாளர் சுதா பாலசுப்பிரமணியன் வரவேற்றார். உடன் தி.மு.ராசேந்திரன் எம்.எல்.ஏ., தென்காசி தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஜெயபாலன், முன்னாள் பொறுப்பாளர் செல்லத்துரை, முன்னாள் எம்.எல்.ஏ. சதன் திருமலை குமார், கழக நிர்வாகிகள் அப்பாஸ், பீரப்பா, ஆறுமுகச்சாமி உட்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### மரக்காணம் அருகே 11 வயது சிறுமிக்கு பாலியல் வன்கொடுமை:

# சட்டம் - ஒழுங்கு சீர்கெட்டிருப்பதை ஒப்புக்கொண்டு - புதிய அரசு நடவடிக்கை எடுக்கப்போவது எப்போது?

## கனிமொழி கருணாநிதி எம்.பி. — வலைதளப் பதிவில் கண்டனம்!

சென்னை, மே 26 -

**மரக்காணம் அருகே 11 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான நிகழ்வையடுத்து - அதனைக் கண்டித்து வலைதளப்பதிவிட்டுள்ள கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் “சட்டம் - ஒழுங்கு சீர்கெட்டிருப்பதை ஒப்புக்கொண்டு, இந்தப் புதிய அரசு நடவடிக்கை எடுக்கப்போவது எப்போது?” எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.**

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. விடுத்துள்ள ‘ட்விட்டர்’ பதிவு வருமாறு:-

விழுப்புரம் மரக்காணம் அருகே 11 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான செய்தி அதிர்ச்சி அளிக்கிறது. கடந்த இரண்டு வாரங்களாக, நாள்தோறும் இதுபோன்று வரும் செய்திகளால் தமிழ்நாட்டில்உள்ள பெண்களும் குழந்தைகளும் கடும் அச்சத்தில் உறைந்து போயுள்ளனர்.

சட்டம் ஒழுங்கு சீர்கெட்டிருப்ப தை ஒப்புக்கொண்டு, குழந்தைகள் மற்றும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய, இந்த புதிய அரசு நடவடிக்கை எடுக்கப்போவது எப்போது?

இவ்வாறு அப்பதிவில் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### பிரதமர் மோடியின் நிர்வாகத் திறமையின்மையால்

# நாட்டின் பொருளாதாரம் முற்றிலும் சீரழிவு!

## பீகார் மாநில எதிர்க்கட்சித் தலைவர் தேஜஸ்வி குற்றச்சாட்டு!

பாட்னா, மே 26 -

மோடியின் நிர்வாக திறமையின்மையால் நாட்டின் பொருளாதாரம் முற்றிலுமாகச் சீரழிந்துள்ளது என தேஜஸ்வி குற்றம்சாட்டியுள்ளார்.

பீகார் மாநில எதிர்க்கட்சித் தலைவர் தேஜஸ்வி வெளியிட்டுள்ள சமூகவலைத்தள பதிவில், இன்று ரூபாயின் மதிப்பு மிக குறைந்த நிலையை அடைந்து, ஆசியாவிலேயே மிகவும் பலவீனமான நாணயமாக மாறியுள்ளதாக விமர்சித்துள்ளார். மோடியின் தலைமையில் ரூபாயின் மதிப்பு தொடர்ந்து



சரிந்து வருவது இது 8வது ஆண்டு என குறிப்பிட்டுள்ள தேஜஸ்வி, கடந்த 12 ஆண்டுகளில், ரூபாய் தனது மதிப்பில் பாதியை இழந்திருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டு மக்களை தவறாக வழி நடத்தும் பிரதமர், இந்தியா உலகின் முன்னணி பொருளாதாரங்களில் ஒன்று என கூறுகிறார். ஆனால், அமெரிக்க டாலர்களில் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியை பார்த்தால், வங்காள தேசத்தை விடவும் பின்தங்கி, உலக அளவில் இந்தியா 16வது இடத்தில் உள்ளது. தொலைநோக்கு பார்வையற்ற என்.டி.ஏ. அரசாங்கத்தின் பொருளாதார கொள்கைகளால், நாட்டின் பொருளாதாரம் முற்றிலுமாக சீரழிந்துள்ளதாக குற்றம் சாட்டியுள்ளார்.

நாட்டின் மிகவும் பின்தங்கிய மற்றும் ஏழ்மையான மாநிலமான பீகாரின் நிதி நிலைமை மிகவும் மோசமாக உள்ளது.

எல்.பி.ஜி. எரிவாயு, பெட்ரோல், டீசல், உரங்கள், விதைகள், கல்வி, மருந்து, நீர்ப்பாசனம் என அனைத்து பொருட்களின் விலைகளும் உயர்ந்து வருகின்றன.

ஆனால் இரட்டை எஞ்சின் என அழைக்கப்படும் என்.டி.ஏ. அரசாங்கத்திடம் பணவீக்கத்தை கட்டுப்படுத்த உறுதியான செயல் திட்டம் எதுவும் இல்லை எனவும் தேஜஸ்வி கடுமையாக விமர்சித்துள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளை சிறப்புறக் கொண்டாடுவது குறித்து ஆலோசிக்க

# தி.மு.க. மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை!

## தீர்மானங்கள் நிறைவேற்றம்! ஹெலன் டேவிட்சன் — நாமக்கல் ப.ராணி அறிவிப்பு!

சென்னை, மே 26 -


தி.மு.க. மாநில மகளிரணி, மகளிர் தொண்டரணி, பிரச்சாரக்குழு, வலைதளக்குழு ஆலோசனைக் கூட்டம், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் காணொலி மூலம் நடைபெற்றது.

மகளிரணித் தலைவர் விஜயா தாயன்பன், மகளிரணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ராணி, மாநில நிர்வாகிகள் தமிழரசி ரவிக்குமார், குமாரி விஜயகுமாரி, பவானி ராஜேந்திரன், ரத்னா லோகேஷ், ராணி ரவிச்சந்திரன், ரேகா பிரியதர்ஷினி, விஜிலா சத்தியானந்த், சேலம் சுஜாதா, அங்கையற்கண்ணி, கோவை மாலதி, டாக்டர் மாலதி, டாக்டர் யாழினி, உமா மகேஸ்வரி, ஜெஸ்ஸி, அமுலு, தேன்மொழி ஆகியோர் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் ஜூன் 3 நம் உயிரோடும் உணர்வோடும் கலந்திட்ட திருநாள். பெண்களுக் காக எண்ணிலடங்கா திட்டங்களைத் தீட்டி, பல்வேறு சாதனைகளைப் படைத்திட்ட அந்தப் பெருமகனாரின் பிறந்தநாளை, மகளிர் அணியினர் சிறப்பாகக் கொண்டாடும் முகத்தான் பற்பல ஆலோசனைகளை கனிமொழி கருணாநிதி எம்.பி. வழங்கினார்.

அதைத் தொடர்ந்து மகளிரணி நிர்வாகிகளும் கலந்தாலோசித்து பின்வருமாறு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.





நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தி.மு.க. மகளிரணியின் உழைப்பு பாராட்டத்தக்கது. “வெல்லும் தமிழ்ப்பெண்களாக” தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில், களத்தில் நின்று பணியாற்றிய மகளிரின் பணி போற்றத்தக்கது.

அத்தகைய மகளிர்க்கு ஆக்கமும் ஊக்கமும் அவர்களுக்கு உரிய மரியாதையும், அங்கீகாரமும் அளிக்கும் வகையில், கலைஞர் பிறந்தநாளன்று, தமிழ்நாட்டின் அத்தனை மாவட்டங்களிலும் அவர்களை அழைத்து, அவர்களுக்குச் சிறப்பு செய்ய வேண்டுமென தீர்மானிக்க ப்பட்டது.

நடந்து முடிந்த பொதுத் தேர்தல் நம் அனைவருக்கும் மிகப்பெரிய அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. இத்தேர்தல் முடிவு நமக்கு மட்டுமல்ல மெத்தப்படித்தவர்களையும், நடுநிலையாளர்களையும் வியக்க வைத்திருக்கிறது.

கடந்த 5 ஆண்டுகால கழக ஆட்சியின் சாதனைகளைப் பார்த்தவர்கள், கல்வியிலும், தொழில்துறையிலும், விளையாட்டுத் துறையிலும், பொருளாதாரத்திலும் எந்த அளவுக்கு தமிழ்நாடு முதன்மைப் பெற்றிருக்கிறது என்பதை நன்கறிந்தவர்கள் ஏன் இப்படி? எதற்காக இப்படி? என்று மலைத்துப் போயிருக்கிறார்கள்.

மேற்சொன்ன ஏன்? எப்படி என்ற கேள்விகளுக்கு விடை காணவும், இத்தோல்வியை வெற்றிக்கான படிக்கட்டுகளாக மாற்றவுந்தான் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில், நம் கழகத் தலைவர் திராவிட நாயகன், முன்னாள் முதல்வர், 5 ஆண்டு கால சாதனைகளின் சொந்தக்காரர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் நமக்குச் சிறப்பான ஆலோசனைகளை வழங்க இருக்கிறார்.

சென்னையில் நடைபெறவிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவில் மகளிரணி, தொண்டரணி மாநில நிர்வாகிகள், அனைத்து மாவட்ட, மாநகர மகளிரணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பிரச்சாரக்குழு, வலைத்தளக்குழு, ஆலோசனைக்குழு நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

மேற்படி விழா நடைபெறும் இடமும், தேதியும் விரைவில் அறிவிக்கப்படும்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.ராணி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

### கோவையில் 10 வயது சிறுமி கொல்லப்பட்டு நாடே துக்கத்தில் இருக்கும்போது

# செய்தியாளர்கள் சந்திப்பில் குலுங்கிக் குலுங்கி சிரித்த ஐ.ஜி. ரம்யா பாரதி!

## பொதுமக்கள் முகம் சுழிப்பு!

கோவை, மே 26 -

கோவையில் 10 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்து கொல்லப்பட்ட சம்பவத்தில், தங்களது மகளை இழந்ததுபோல் நாடே துக்கத்தில் இருக்கும் போது, சம்பவம் குறித்து செய்தியாளர்கள் சந்திப்பில் விளக்கம் அளித்த கோவை ஐஜி ரம்யா பாரதி, சக அதிகாரிகளுடன் குலுங்கி குலுங்கி சிரித்தது பொதுமக்களை முகம் சுழிக்க வைத்துள்ளது.

ஏதும் அறியா அந்த பிஞ்சுக் குழந்தையின் இறப்பு, ஒவ்வொரு தாய்மார்களையும் கண்ணீர் சிந்த வைத்துள்ளது. குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை பெற்றுத் தர வேண்டும் என நாடு முழுவதும் கண்டனக் குரல்கள் எழுந்து வருகின்றன. சிறுமியின் உடல் பிரேத பரிசோதனை முடிந்த பிறகும் கூட, தமிழ்நாடே குழந்தைக்கு ஆதரவாக குரல் எழுப்பியபோதும் மவுனம் சாதித்து வந்த முதலமைச்சர் விஜய், தனது குழந்தையின் இறப்புக்கு முதலமைச்சர் பதில் சொல்லியே ஆக வேண்டும் என தாய் கதறி அழுதார். அப்போதுதான் தமிழ்நாட்டில் இப்படி ஒரு சம்பவம் நடந்துள்ளதா? என்பதை அறிந்ததுபோல், அப்போதும்கூட ஒரு அறிக்கை விடாமல், சமூகவலைதளத்தில்தான் முதலமைச்சர் விஜய் கண்டனத்தை பதிவிட்டார். இந்த நிலையில், சிறுமியின் கொலை சம்பவத்தில் நடந்தது என்ன? என்பதை விளக்கமளிக்க, கோவை ஐஜி ரம்யா பாரதி தலைமையில் அதிகாரிகள் செய்தியாளர்களை சந்தித்தனர். தமிழ்நாடே சோகத்தில் இருக்கும் போது, செய்தியாளர்கள் சந்திப் பின்போது, கோவை ஐஜி குலுங்க குலுங்க சிரித்தது, பொதுமக்களை முகம் சுழிக்க வைத்துள்ளது. ஊரே அல்லோலப்பட்டு இருக்கும் போது, முக்கிய பொறுப்பில் இருந்து கொண்டு சிரிக்கும் நேரமா இது? என பொதுமக்கள் தங்களது ஆதங்கத்தை சமூகவலைதளங்களில் கொட்டி வருகின்றனர்.

**அமைச்சர் கீர்த்தனாவின் ஆணவப் போக்கு!**

எந்த பிரச்சனை என்றாலும் சமூகவலைத்தளங்களில் கொதித்தெழுந்த கீர்த்தனா, அமைச்சராக பதவி ஏற்ற பின், 10 வயது சிறுமி கொடூரமாக கொலை செய்யப்பட்ட விவகாரத்தை சிரித்துக் கொண்டே கடந்து சென்றது கடும் கண்டனத்திற்கு உள்ளாகி வருகிறது.

சமூகவலைத்தளங்களில் சர்சையான கருத்துக்களை பேசி பிரபலமானவர் கீர்த்தனா.

கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக சார்பில் சிவகாசி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இவர் தற்போது, தொழில் துறை அமைச்சராக பதவி வகித்து வருகிறார். தேர்தல் பிரச்சாரத்தின் போது, பெண்களின் உரிமை, பெண்களின் பாதுகாப்பு என்றும், தனக்கு வாக்களித்தால் பெண்ணுரிமை பாதுகாக்கப்படும் என்றும் உணர்ச்சிகரமாக பேசி இவர் வாக்குசேகரித்தார். தற்போது அமைச்சர் பதவி கிடைத்ததும், 10 வயது பெண் கொடூரமாக கொலை செய்யப்பட்ட விவகாரத்தை சிரித்துக் கொண்டே கடந்து சென்றுள்ளார். கோவையில் சிறுமி கொலை குறித்து, விருதுநகரில் செய்தியாளர்களின் கேள்விக்கு ஆணவத்துடன் அமைச்சர் கீர்த்தனா பதிலளித்துள்ளார். வாக்கு கேட்கும் போது இருந்த கீர்த்தனாவின் பணிவு தற்போது, ஆணவமாக மாறியுள்ளது.

அமைச்சர் கீர்த்தனாவின் இந்த ஆணவப் போக்கிற்கு இணையதளங்களில் கடும் கண்டனங்கள் எழுந்து வருகின்றன.

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு

# மாதவரம் வடக்குப் பகுதி தி.மு.க. ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் அறிக்கை!

சென்னை, மே 26 -

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மண்டலப் பொறுப்பாளர், கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி, மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் ஆகியோர் அறிவுறுத்தலின்படி, சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. ஆலோசனைக் கூட்டம் இன்று (26.05.2026 - செவ்வாய்க்கிழமை) மாலை 5:00 மணிக்கு, 16 வது வட்டம், மணலி புதுநகர், புனித அந்தோணியார் சமூக நலக் கூடத்தில் பகுதி அவைத் தலைவர் வி.திராவிட வீரன் தலைமையில் நடைபெற உள்ளது.

ஜூன் 3 அன்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை புத்தெழுச்சி நாளாக கொண்டாடுவது குறித்து ஆலோசனை செய்ய, மாதவரம் வடக்கு பகுதிக்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பாக முகவர்கள், பாத உறுப்பினர்கள், பாக இளைஞரணியினர், பாகத் தகவல் தொழில் நுட்பணியினர் உள்ளிட்ட கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாதவரம் வடக்குப் பகுதி தி.மு.க. செயலாளர் புழல் எம்.நாராயணன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# மதுரவாயல் வடக்கு பகுதி கழக ஆலோசனை கூட்டம் !

## பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் பங்கேற்பு!

சென்னை,மே 26 -

கழகத் தலைவர் அன்பு தளபதி மற்றும் கழக இளைஞரணி செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆணைக்கு இணங்கவும் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி நேற்று (25.05.2026 திங்கள் கிழமை) மாலை 6.00 மணி அளவில் பகுதி கழக அலுவலகத்தில் (நொளம்பூரில்) பகுதி கழக அவைத்தலைவர் ஆர்.கர்ணல் தலைமையில், பகுதி கழக நிர்வாகிகள் ஆ.மாலினி, தீ.பாலாஜி, எம்.ஏ.செந்தில் சுரேஷ், ம.உதயகுமார் ஆகியோரின் முன்னிலையில் பகுதி கழக ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மதுரவாயல் வடக்குப் பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் பங்கேற்று ஆலோசனை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மதுரவாயல் வடக்கு பகுதி கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், வட்டச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணி களின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா.

கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.






கழக விவசாய தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம் கழக விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா ஏற்பாட்டில் காணொலி வாயிலாக நேற்று முன்தினம் (24.05.2026) மாலை 4 மணிக்கு நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மலை குலைந்தாலும் நிலை குலையாத மாணிக்கத்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது என்றும், மாநிலம் முழுவதும் விவசாய தொழிலாளர் அணி சார்பில் வாழ்த்து சுவரொட்டிகள் ஒட்டுவது என்றும், மாநில அளவிலான வாழ்த்தரங்கம் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் மாநில விவசாய தொழிலாளர் அணி தலைவர் முன்னாள் அமைச்சர் மதிவாணன், துணை தலைவர் புதுக்கோட்டை. சந்திரசேகரன், இணை செயலாளர்கள் ஜெகவீரபாண்டியன், ப. கைலாசம், துணைச்செயலாளர்கள் வ.அன்பழகன், பா.அருண்குமார், இரா.சங்கர், பி.பாக்கியநாதன், கபெத்தாம்பாளையம் சா. ராஜசேகரன், எஸ். சேதுராமன், கொடி சந்திரசேகர், முத்துக்குமாரசாமி, கே.ஆர்.என்.போஸ், வ.து.ந.ஆனந்தன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் ஒன்றியம், பகுதி, பேரூர், கழகத்தின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கேபிள் த.வேல்கணேசன் வரவேற்றார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சின்னமாத்தூர் வீ.மணிகண்டன், டி.ஜி.ஆர்.மணிவண்ணன், சி.எஸ்.எஸ்.டி. சீனிவாசன், ஜி.கே.இனியன், மோரை சதீஷ் முன்னிலை வகித்தனர். இளைஞர் அணி சார்பில் ஜூன் – 3 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளையொட்டி, ஏழை எளியோருக்கு உணவு, நலத்திட்ட உதவிகள் வழங்க வேண்டும் உள்ளிட்டவை ஆலோசிக்கப்பட்டது.